# பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புள்ள ஒரு ஆத்துமாவை நீங்கள் அங்கே உள்ளே பெற்றிருக்கிறீர்கள்



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

20. இப்பொழுது, கவனியுங்கள். ஆனால் உலகமோ, அவர்கள், "நல்லது, நான் சபையைச் சேர்ந்தவன். நான் அசெம்பிளிஸ் சபையைச் சேர்ந்தவன். நான் நான்குசதுர (Foursquare) சபையைச் சேர்ந்தவன். என்னால் செய்யக்கூடிய சிறந்த காரியம் அங்கே தான் இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்ளும் அல்லது அதை விட்டு விடும்" என்று கூறுகிறார்கள். **நீங்கள் ஒரு தட்டு சூப்பை எடுத்து, அதில் ஒரு சிலந்தி கிடந்தால், அதைப் புசிக்கவே மாட்டீர்கள். அதை உங்களுக்குக் கொடுத்த நிறுவனத்தின் மீது வழக்குத் தொடுப்பீர்கள். அது உண்மை.** அது சரியே. நீங்கள் அதைச் செய்வீர்கள். **நீங்கள் எதற்காகவும் அதைப் புசிக்கவே மாட்டீர்கள். ஆனால் அப்படியே எந்தவிதமான ஒரு பழைய மதக்கோட்பாட்டையும் உங்கள் கழுத்துக்கு கீழாக உங்கள் ஆத்துமாவில் கடந்து செல்ல அனுமதிக்கிறீர்கள்.** அவை எல்லா வற்றிற்கும் பிறகு, எப்படியும் அந்த சரீரம் மரிக் கத்தான் போகிறது. அது உண்மை.

இங்கே கொஞ்ச காலத்திற்கு முன்பு, நான் ஒரு பொருட்காட்சி சாலையில் இருந்தேன், அவர்கள்

ஐம்பது பவுண்டுகள் எடையுள்ள - **சரியாகச் சொன்னால் 150 பவுண்டுகள் எடையுள்ள ஒரு மனிதனைக் குறித்த பகுப்பாய்வை** (analysis) **வைத்திருந்தனர். அவனுடைய சரீரம் 84 காசுகள்** (cents) **பெறுமானமுள்ள ரசாயனங்களாகத் தான் இருந்தது. அது சற்றேறக்குறைய ஒரு கோழிக்கூண்டின் மேல் தெளித்து, அதை வெள்ளையடிக்கப் போதுமான அளவு கால்சியத்தையும் மற்றும் ஒவ்வொன்றையும் தான் கொண்டிருந்தது. அவனுடைய முழு எடையும் 84 காசுகள்** (cents) **விலைமதிப்புள்ளதாகவே இருந்தது.** அங்கே இரண்டு பையன்கள் நின்று கொண்டு, ஒருவன் மற்றவனிடம், "ஜான், நமக்கு அதிக விலைமதிப்பு இல்லை, அப்படித்தானே?" என்றான்.

**மற்றவன், "அது சரிதான்; நாம் அதிக விலைமதிப்புள்ளவர்கள் என்று நான் நம்பவில்லை" என்றான். நூற்றைம்பது பவுண்டுகளுக்கு விலை மதிப்பு 84 காசுகள்** (cents) **தான். இப்பொழுது, துவக்க முதலே நீங்கள் பெரியவர்களல்ல, அப்படித்தானே?**

**ஆனால் அந்த 84 காசுகளை** (cents) **நீங்கள் அக்கறை எடுத்து கவனித்துக் கொள்வதில் நிச்சயமுடையவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் அதன் மேல் ஒரு சிறு விலங்கின் மென்மயிரினால் செய்யப்பட்ட 500 டாலர்கள் விலைமதிப்புள்ள கோட்டை அணிந்து கொண்டு, உங்கள் மூக்கை நிமிர்த்திக் கொள்கிறீர்கள். மழை பெய்தால், அது உங்களை மூழ்கடித்து விடும்.** *அந்த 84 காசுகளை* (cents) *கவனிப்பதில் நீங்கள் உறுதியாய் இருக்கிறீர்கள்.* ஆம், ஐயா.

21. ஆனால் **பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புள்ள ஒரு ஆத்துமாவை நீங்கள் அங்கே உள்ளே பெற்றிருக்கிறீர்கள், அதில் எதையும் திணிப்பதற்கு நீங்கள் பிசாசை அனுமதித்து, அதைக் குறித்து தேவனுடைய சரியான வழியை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, அதை நீதி என்றும், பக்தி என்றும் அழைத்துக் கொள்கி**

**நீர்கள்.** அது உண்மை. **உங்கள் ஆத்துமா பத்தாயிரம் உலகங்கள் விலைமதிப்புடையது. உங்களுடைய சரீரமோ 84 காசுகள் (cents) மாத்திரமே விலைமதிப் புடையது. நீங்கள் அதை சுற்றிலும் இழுத்துக் கொண்டு சென்று, அதைக் கவனிப்பதிலேயே உறுதியாயிருக்கிறீர்கள். ஓ, நீங்கள் அதை சவரம் பண்ணி, அதைச் சரியாக சிங்காரித்து, ஆனால் என்னே, அதற்கு அருமையாக உடையுடுத்திக் கொள் கிறீர்கள். ஆனால் அந்த ஆத்துமாவுக்கு வஸ்திரம் தரிக்க நீங்கள் உறுதியற்றவர் களாய், இஸ்டமான எதையும் அதன் வழியாக இழுக்க அனுமதிக்கிறீர்கள்.** அதில் ஒரு சிலந்தியோடு உங்களிடம் கொடுப்பார்களானால், அதை உங்களுக்குக் கொடுத்த உணவுவிடுதி மீது வழக்குத் தொடுப்பீர்கள்.

*செய்தி: மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும், பாகம் - 2, பிப்ரவரி 17, 1961*

★★★★★